## 28.18 உயர் நிலைக் குழு அறிக்கை – மாவட்டக் கொள்முதல் குழுவில், மாவட்ட ஊராட்சித் தலைவரை உறுப்பினர் ஆக்குதல் – உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளித்தல்

ஊரக வளர்ச்சித் (தி3) துறை

அரசாணை (நிலை) எண். 125 நாள் : 7.7.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.320, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 11.11.97.
2. அரசு ஆணை (நிலை) எண்.78, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 28.04.98.

**ஆணை**

இந்திய அரசியலைப்பு சட்டம், அட்டவணை II–ல் மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருள்கள் என்னென்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி முதற்கட்டமாக மாநில திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள், சிறுபாசனம், சிறுகாடுகள் மற்றும் வன உற்பத்திப் பொருட்கள், பாதுகாப்பு ஆகியவற்றை தவிர பிற இனங்கள் மீது ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. மேலும், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறப்பினர்களாகக் கொண்டும் உயர்நிலைக் குழு அமைத்து, பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டன. உயர்நிலைக் குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.01.99 அன்று சமர்ப்பித்தது.

2. உயர்நிலைக் குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 3.5.99 மற்றும் 4.5.99 ஆகிய நாட்களில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி அரசு கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடுகிறது.

(அ) மாவட்ட கொள்முதல் குழுவில் மாவட்ட ஊராட்சித் தலைவரும் குழுவின் ஒரு உறுப்பினராக செயல்படுவார்.

(ஆ) மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் நிர்வாக பொறுப்பு ஏற்ற பின்பு மாறுபட்ட நிலையில் அடிமட்டத்திலிருந்து திட்டமிட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதில் உள்ளாட்சி அமைப்பின் பங்கை உணரும் வகையில் அலுவலர்கள் இதற்கு உறுதுணையாக ஆற்றவேண்டிய கடமை பற்றியும் பஞ்சாயத்து அமைப்புகளில் செயல்படும் அலுவலர்களுக்கும் பிற துறை அலுவலர்களுக்கும் உரிய பயிற்சி அளிக்கப்படும்.

(இ) உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கும் அலுவலர்களுக்கும் பயிற்சிக்கு அவசியமான கையேடுகள் தயாரித்து வழங்குவதுடன் பயிற்சி அளிக்கும் ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி நிறுவனங்கள் தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் இதுபோன்ற பயிற்சி அளிப்பதற்குரிய கட்டமைப்பு வசதிகளை விரிவு படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(ஈ) திட்ட செயல்பாடு, அடிப்படை தேவைகள், வசதிகள் போன்றவற்றின் விபரம் உடனுக்குடன் தர ''கிராம நிர்வாக தகவல் முறை திட்டம்'' எல்லா மாவட்டங்களிலும் கடைபிடிக்க வேண்டும். கிராமங்களின் நடைபெறும் திட்டங்கள் அவற்றின் மதிப்பீடு மற்றும் செயல்படுத்தும் நபர் போன்ற விபரங்கள் பற்றிய தகவல் பலகை அமைத்து அனைத்த ஊராட்சிகளிலும் வைக்கப்பட வேண்டும்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள ஆணையினை உடனடியாக செயல்படுத்துமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி இயக்குநர் மற்றும் முதல்வர், ஊரக விரிவாக்க பயிற்சி மையம் ஆகியோர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்